டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 20.9.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 079 - Madurai | Online Edition

## கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை

# 'தூய்மையே சேவை' இயக்கத்தை தொடங்கியது

புது தில்லி, செப்.19

மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் இணை அமைச்சர் ஜார்ஜ் குரியன், மீன்வளத்துறை செயலாளர் டாக்டர் அபிலக்ஷ் லிக்கி மற்றும் பிற மூத்த அதிகாரிகள், ஊழியர்கள் முன்னிலையில் உறுதிமொழி செய்து வைத்தார்.



மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம், பழக்கவழக்கத் தூய்மை – கலாச்சாரத் தூய்மை' என்ற கருப்பொருளுடன் தூய்மையே சேவை இயக்கத்தை தொடங்கியுள்ளது.

தூய்மை மற்றும் சுகாதாரத்திற்கான அர்ப்பணிப்பு உணர்வை ஊக்குவிப்பதற்காக, மீன்வளத்துறை 17.09.24 அன்று கிருஷி பவன் வளாகத்தில் 'பழக்கவழக்கத் தூய்மை– கலாச்சாரத் தூய்மை" என்ற கருப்பொருளுடன் தூய்மையே சேவை இயக்கத்தை தொடங்கியுள்ளது.

வெளியே நிற்கும் நபர்களின் குழு விளக்கம் தானாகவே உருவாக்கப்படும்.

இந்த நாட்டில் தூய்மையை நோக்கிய பழக்கவழக்க மாற்றத் திற்கான பிரச்சாரமாக 2014–ல் தொடங்கப்பட்ட தூய்மை இந்தியா இயக்கத்தின் தற்போதைய திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த இயக்கம் உள்ளது.




ஒரு கட்டிடத்திற்கு வெளியே உள்ள மக்கள் குழு விளக்கம் தானாக உருவாக்கப்படும்

18 செப்டம்பர் 2024 முதல் பல்வேறு தூய்மை நடவடிக்கை களுக்கு இத்துறை திட்டமிட்டுள்ளது, இதில் அலுவலக வளாகம், அருகிலுள்ள உள்ளூர் பகுதிகள், 'தாயின் பெயரில் ஒரு மரக் கன்று' திட்டத்தின் கீழ் மரங்களை நடுதல், பல்வேறு போட்டி களை நடத்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய தூய்மை இருவார முழுவதும் மீன்வளத்துறை 'தூய்மை இந்தியா இயக்கம்' என்ற இலக்கை அடைய உறுதி பூண்டுள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நிலக்கடலை விதைப்பண்ணையில் கோவை, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் ஆய்வு



கோவை, செப்டம்பர் 19

கோவை மாவட்டம், மதுக்கரை வட்டாரத்திற்குட்பட்ட ஒத்தக்கால் மண்டபம் மற்றும் சீராபாளையத்தில் அமைக்கப் பட்டுள்ள நிலக் கடலை கதிரி லெபாக்ஷி மற்றும் BSR-2 இரக விதைப்பண்ணைகளை கோவை, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பி.ஆ.மாரிமுத்து ஆய்வு செய்தார்.

அப்பொழுது அவர் கூறுகையில் 'நல்ல முளைப்புத் திறன், இனத்தூய்மை மற்றும் புறத்தூய்மை உடைய விதைகளை உற்பத்தி செய்ய, நிலக்கடலை விதைப்பண்ணை அதே ரகம் மற்றும் பிற ரக பயிரில் இருந்து பயிர் விலகு தூரம் 3 மீட்டர் இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், நாம் அமைத்த விதைப்பண்ணையில் வேறு இரக பயிர்கள் இல்லாமல் பராமரித்தல் வேண்டும். பிற ரக கலவன்கள் தென்பட்டால் உடனுக்குடன் நீக்கிட வேண்டும். சான்று நிலை எனில் 0.2 சதமும் ஆதார நிலை எனில் 0.1 சதமும் மட்டுமே அனுமதிக்கப்படும்.

விதைப்பண்ணை அறுவடை செய்த பின், விதை குவியல்களின் சரியான ஈரப்பதம் மற்றும் கல், மண், பூச்சி நோய் தாக்கிய விதைகளை அகற்றி தரமான விதையை விவசாயிகள் உற்பத்தி செய்ய வேண்டு மென்றார்.

மேலும் பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், பூ உதிர்வை குறைக்க, காய் பிடிப்பை அதிகரிக்க TNAU நிலக்கடலை ரிச் ஏக்கருக்கு 2 கிலோ விகிதத்தில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூப்பூக்கும் பருவம் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் தெளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஆய்வின் போது விதைச்சான்று அலுவலர் ப.பிரியதர்ஷினி மற்றும் உதவி விதை அலுவலர் ர.ஜெயபிரகாஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# மின்னணு பண பரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் பெரும் வசதி

## சூளகிரி வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

கிருஷ்ணிகரி, செப்.19

கிருஷ்ணகிரி மாவட்ட சூளகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜான் லூர்து சேவியர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, சூளகிரி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் விவசாயிகளுக்கு விதைகள், நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரங்கள், உயிரியல் பூச்சி கொல்லிகள், பண்ணை கருவிகள் மற்றும் தார்பாய்கள் போன்றவைகள் மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நடைமுறையில் உள்ளவாறு விவசாயிகள் மேற்கண்ட இடுபொருட்களை மானிய தொகை போக விவசாயிகளின் பங்கு தொகையினை பணம் செலுத்தி வாங்கி செல்கின்றனர். இதனை எளிமையாக்கும் வகையில் தற்போது இந்த முறையானது நிறுத்தப்பட்டு மின்னணு பண பரிவர்த்தனை மூலம் பணம் செலுத்தி இடுபொருட்களை பெற்றுக் கொள்ளும் முறை அமலில் உள்ளது.

சூளகிரி வட்டார விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இடுபொருட்கள் வாங்க வரும் போது ஏடிஎம் கார்டுகள் மற்றும் யுபிஐ அடையாள எண்களை கொண்டு பணம் செலுத்தும் வகையில் சூளகிரி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விற்பனை முனைய கருவிகள் (POS MACHINE) மற்றும் க்யூஆர் கோடு (QR CODE) வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களிடம் உள்ள ஏடிஎம் கார்டுகள் (ATM CARD) கூகுள் பே (Google pay) போன் பே (phone pay) போன்றவற்றை கொண்டு சூளகிரி வேளாண்மை விரிவாக்க மையத்தில் வேளாண்மை இடு பொருட்களை மானியத்தில் வாங்கி பயனடையுமாறு கேட்டு கொள்ளப்படுகிறது என்று வேளாண்மை உதவி இயக்குநர் ஜான் லூர்து சேவியர் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 19.09.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 35 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 54 | 57A | உருளை(ஊட்டி) | 55 | 60 |
| 2 | வெண்டை | 25 | 28 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 22 | 26 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 36 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 16 | 20 | 60 | கேரட் | 60 | 70 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 35 | 40 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 48 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 28 | 32 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 18 | 24 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 25 | 28 | 66 | காளிபிளவர் | 50 | 58 |
| 11 | பூசணி | 15 | 18 | 67 | பட்டாணி | 170 | 175 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 38 | 69 | இஞ்சி | 60 | 136 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 38 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 42 | 46 | 71 | பென்னி பீன்ஸ் | 45 | 50 |
| 16 | பெ.வெங்காயம் | 50 | 56 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 26 | 73 | ஊட்டி அவரை | 110 | 135 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 54 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 |
| 19 | முருங்கை | 35 | 42 | 71A | | | |
| 20 | தேங்காய் | 40 | 42 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 65 | 70 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 130 | 140 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 35 | 38 |
| 28 | கறிவேப்பிலை | 25 | 30 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 110 | 115 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 28 | 32 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 40 | 45 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 32 | 38 | | | | |

# நெற்பயிரில் ஆனைக்கொம்பன் குலை நோய் பாதிக்கப்பட்ட வயலில் வேளாண்மை விஞ்ஞானிகள் ஆய்வு



விழுப்புரம், செப்.19

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் வட்டாரம், வி அகரம் கிராமத்தில் நெற்பயிரில் ஆணைக்கொம்பன் மற்றும் குலை நோய் தாக்குதலை வேளாண் அதிகாரிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் கூட்டு ஆய்வு மேற்கொண்டனர். இவ்வாய்வில் திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையம் இணை பேராசிரியர் செந்தமிழ், பாதிக்கப் பட்ட பயிரை பார்வையிட்ட இதன் ஆரம்ப அறிகுறி தாக்குதல் பற்றிய ஆலோசனைகள் எடுத்துரைக்கப்பட்டது. ஆனைக் கொம்பன் பாதிக்கப்பட்ட பயிர்கள் வளர்ச்சி குன்றி காணப்படும். இலைகள் வெங்காய இலைகள் போன்று காட்சியளிக்கும். கதிர்கள் தோன்றாது இதற்கு பரிந்துரைக்கப்பட்ட அளவு மட்டுமே தழைச்சத்து இடவேண்டும். புறஊதா விளக்கு பொறி வைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்க வேண்டும். கார்போ சல்பான் 25% EC 1 litter/ Ha அல்லது தயோமெத்தாக்ஸிம் 25% wg 100 gm / Ha தெளித்து கட்டுப்படுத்தலாம் .




### குலைநோய் பாதிப்புக்கான அறிகுறிகள்

இலைகள் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப்படும். தீவிர தாக்குதலின் போது புள்ளிகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பயிர் முழுவதும் எரிந்தது போன்ற தோற்ற மளிக்கும் பயிரின் அனைத்து பகுதிகளும் தாக்கத்திற்கு உண்டாகும். இதற்கு எதிர் திறன் கொண்ட ரகங்கள் கோ 47 கோ 50 ஏ டி டி 37 ஏ எஸ் டி 16 வெள்ளை பொன்னி ஆகியவற்றை பயிரிடலாம். அதிக தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும்.

நோய் பாதித்த வயல்களில் அறுவடைக்குப்பின் வைகோல் மற்றும் தூர்களை எரித்து விட வேண்டும். கேப்டான் அல்லது கார்பெண்டசிம் 1 கிராம் ஒரு கிலோ விதைக்கு என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். ஆய்வின் போது வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சுமதி வேளாண்மை அலுவலர் விஜய் துணை வேளாண்மை அலுவலர் சுப்புராஜ், உதவி வேளாண்மை அலுவலர் ராதிகா வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் அருள்பாபு வீரமணி பயிர் அறுவடை பரிசோதகர் பிரவீனா மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் முருகன் கார்த்திகேயன் உழவர் நண்பர்கள் கலந்து கொண்டனர்.



# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலக தண்ணீர் கண்காணிப்பு தின விழிப்புணர்வு



திருச்சி, செப்.19

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இன்று (18.9.24) உலக தண்ணீர் கண்காணிப்பு தின விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

அமெரிக்காவின் தூய்மை நீர் நிறுவனம் இத்தினத்தை 2003ல் அறிவித்தது முதல் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 18ம் தேதி உலக தண்ணீர் கண்காணிப்பு தினம் உலகளவில் கொண்டாடப்படுகிறது.

உலகம் முழுவதும் தண்ணீர் வளங்களைப் பாதுகாப்பதில் பொது விழிப்புணர்வு மற்றும் ஈடுபாட்டை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் உள்ளூர் நீர் நிலைகளின் அமிலத்தன்மை, காரத்தன்மை ஆகியவற்றை பரிசோதித்து பார்த்து, நீரின் தரம் குறையாமல் பாதுகாத்திட வேண்டும் எனவும், மேலும் எதிர்கால தலைமுறையினருக்கு தூய்மையான நீர் வளத்தை வழங்க வேண்டும் எனவும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். பங்கு பெற்ற அனைவரும் நீர் வளத்தை கண்காணிக்குமாறு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவிக்கிறார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# கரும்பில் முதிர்ச்சியைப் பாதிக்கும் காரணிகள் மற்றும் தவிர்க்கும் வழிகள்

நன்கு முதிர்ச்சி அடைந்த கரும்பே அதிக எடையும், சர்க்கரைச் சத்தும் கொடுக்கவல்லது. கரும்பு முதிர்ச்சி அடைவதை அதன் மரபுவழி மற்றும் நிலவும் தட்பவெப்பம் ஆகியவை பாதிக்கும். எனினும் கரும்பின் முதிர்ச்சியை வெகுவாக பாதிப்படையச் செய்கின்ற காரணிகளும் அதனை தவிர்க்கும் வழிகளும் கீழே வழங்கப்பட்டுள்ளது.

**காலம் கடந்து வெற்றிடங்களை நிரப்புவது**

- கரும்பு முளைக்காத வெற்றிடங்களில் காலத்தில் (15 தினங்களுக்குள்) நட்டு நிரப்ப வேண்டும்.
- நட்ட கரும்பெனில், நடவு செய்யும் பொழுது அதிக கரணைகளை நட்டு, வளர்ந்த கரும்புப் பயிர்களை நட வேண்டும்.
- கட்டைக் கரும்பெனில் துளிர்விட்ட பெரிய கட்டையை மண்வெட்டியால் பெயர்த்து, இலையை பாதியாக நறுக்கி, மாலை வேளையில் ஊன்றி வெற்றிடங்களை நிரப்பி நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

**காலம் கடந்து தழைச்சத்திடல்**

- கரும்பு நட்ட அல்லது கட்டைக் கரும்பு விட்ட 90-ம் நாட்களுக்குள் கரும்பிற்கு இடவேண்டிய உரங்களை, முக்கியமாகத் தழைச்சத்து உரத்தை, வயலில் இடவேண்டும்.
- காலம் கடந்து இடுகின்ற தழைச்சத்தானது, பக்கப் போத்துக் கரும்பை வளர்ச்சி அடையச் செய்யும்.
- அந்தக் கரும்பு, முதிர்ச்சி பருவம் அடையாமல் இடைப்பட்ட பருவத்தில் வெட்டப்படுவதால் சர்க்கரைச்சத்து வெகுவாக குறையும்.

**முதிர்ச்சி பருவத்தில் நீர் தேங்கியிருத்தல்**

- கரும்பு அறுவடைக்கு 15 நாட்களுக்கு முன் நீர் பாய்ச்சுதலை நிறுத்தி விடவேண்டும்.
- அத்தருணத்தில் மழை பெய்யுமாயின் தேங்கும் நீரை உடன் வடித்து விட வேண்டும்.

● அவ்வாறு செய்யப்படவில்லையெனில், கரும்புத் தண்டில் உள்ள சர்க்கரைச் சத்து குறையும்.

மேற்கூறிய காரணிகளைத் திறம்பட நிர்வகிப்பதன் மூலம் கரும்பில் சீரான முதிர்ச்சியை அடைய வைக்க முடியும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டு கொண்டுள்ளார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# மூங்கில் மரமா? புல்லா? மூங்கில் சாகுபடி செய்வது எப்படி? தெரியுமா?



மூங்கில் சுமார் 47% கரியமில வாயுவை ( $CO_2$ ) உட் கொண்டு 35% பிராண வாயுவை வெளியிடும் அற்புத தாவரம். சுற்றுப்புற சூழலியலிற்கேற்ற தாவரமாக உள்ளது. எடுத்துக் காட்டாக ஒரு எக்கரில் மூங்கில் பயிரிட்டால் அது ஒரு வருடத்திற்கு 12-17 டன் கார்பன் டை ஆக்சைடை எடுத்துக் கொள்ளுகிறது என்றால் வியப் பாகவும் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா.

அத்தகைய மூங்கிலின் சிறப்பை உலக மக்கள் தெரிந்து கொள்ளவும், மூங்கில் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உலக மூங்கல் தினம் செம்டம்பர் 18 அன்று நாடு முழுவதும் கொண்டாப்பபட்டது நாம் அறிந்ததே.

அத்தகைய மூங்கில் மரமா? புல் வகை என பலருக்கும் சந்தேகம் வரலாம். அது குறித்து பார்ப்போம்.

**1) மூங்கில் மரமா ? (அல்லது) புல்லா?**

இது பலருக்கும் தெரிந்து இருந்தாலும்கூட இங்கு மீண்டும் நினைவு படுத்த விரும்புகிறேன். பொதுவாக விஞ்ஞான ரீதியாக பார்க்கும் போது, மூங்கல் என்பது மரம் அல்ல. அது ஒரு புல் வகை. ஆனால் இந்திய வனச்சட்டம் 1927யின்படி, அது மர மாக பார்க்கபட்டது. அதன்படி வெளி நாடுகளிலிருந்து அதை வெட்டி எடுத்து வெளியிடத்திற்கு கொண்டு செல்வது சட்ட விரோதமானது. அது சட்ட படி குற்றம், தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டது. 2017யில் இந்திய வனச் சட்டம் 1927யில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டு, மரவகையி லிருந்து மூங்கில் நீக்கப்பட்டது. இப்போது யாரும் மூங்கில் களை வளர்க்கவோ, வெட்டவோ தடையில்லை என்பதால் தேசிய மூங்கில் இயக்கம் மூலமாக தோட்டக்கலைதுறை மூங்கில் சாகுபடியை முன்னிறுத்தி வருகிறது. தற்போது சமவெளி பகுதியில் தனிபயிராக மூங்கில் சாகுபடி செய்ய பட்டு வருவது குறிப்பிடதக்கது.

**மூங்கில் சாகுபடி தொழில்நுட்பங்கள்?**

மூங்கிலின் அறிவியல் பெயர் (BOMBUSA BUMBOO). இது ஏழைகளின் மரம் என்றும் பச்சை தங்கம் என்று அழைக்கப் படும் மூங்கில் வேகமாக வளரக்கூடிய புல் இனத்தை சார்ந்தது, நாள் ஒன்றுக்கு குறைந்தது 1 அடி முதல் 3 அடி உயரம் வரை வளரக் கூடிய அற்புத தாவரம்.

**இதில் இரண்டு வகைகள் உள்ளன.**

1) முள் மூங்கில் (பொந்து மூங்கில்)

2) முள்ளில்லா மூங்கில். பாம்பூசா வல்காரிஸ்.ப.பல்கோவா தற்போதைய கால கட்டத்தில அதிகமாக பயிரிடப்படுவது முள்ளில்லாத மூங்கிலாகும்.

**நடவு முறை**

நன்றாக உழது குழி 1X1X1மீ அளவில் எடுத்து 5X5 மீட்டர்/ 6X6 மீட்டர் இடைவெளியில் மூங்கில் கன்றுகளை நட வேண்டும். குழியில் அடியுரமாக ஒரு குழிக்கு 10 கிலோ மக்கிய தொழு உரம் + உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் + பாஸ்போ பேக்டீரியா + வேம்) தலா 50 கிராம் விதம் கலந்து இட வேண்டும்.

**ஊடு பயிர் சாகுபடி**

மூங்கில் சாகுபடியில் குறைந்த வயதுடைய பயறுவகைகள், கீரை வகைகள் சாகுபடி செய்வதால் கூடுதலான வருமானம் கிடைப்பதுடன் நில வளமும் மண்வளமும் பாதுகாக்கபடுகிறது.

**மூங்கில் தூர்களை (CULAM CUTTING) எப்படி பராமரிக்க வேண்டும்?**

1) முதலாம் ஆண்டிலிருந்து பராமரிக்க வேண்டும். தூர் பராமரிப்பில் கழிகள் நேராக ,வளர்த்து விட வேண்டும்.

2) அதிக லாபம் தர பக்க கிளைகளை நேராக வளராத நிலையில் அகற்றுதல்.

3) மண் அரிப்பு அரிமானத்தை சரி செய்தல்.

4) முதிர்ந்த இலைகள் காய்ந்துபோன இலைகளை தோப்பினுள் உழுது விடவும். இதனால் மண்வளமும் நீர்பிடிப்பு திறன் அதிகமாகும்.

**மூங்கில் அறுவடை எப்போது?**

நட்ட 4ஆம் ஆண்டிலிருந்து வெட்டலாம். பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அல்லது இரண்டாம் ஆண்டிற்குள் வெட்டலாம். முதிர்ந்த மூங்கில்களை மட்டும் வெட்டி எடுக்கவும். மூங்கில்களை வெட்டும் போது குதிரை குளம்பு வடிவிலோ / ா வடிவிலோ வெட்டினால் சேதாரம் குறையும்.

**மகசூல்**

ஏக்கருக்கு 150-200 தூர்கள். ஒரு தூருக்கு 6 கழிகள் (மூங்கில் கம்பு கிடைக்கும்).

**மூங்கிலின் ஆயுட்காலம்?**

பொதுவாக 45 முதல் 70 ஆண்டுகளாகும். மூங்கில் பூத்து




விட்டால் தூர் முழுவதும் காயத் தொடங்கும். இது செடிகளின் இறுதிகாலத்தின் அறிகுறியாகும்.

**மூங்கில் பயன்பாடுகள்**

எண்ணிலடங்காத பயன்பாடுகளை கொண்டதால் இது பச்சை தங்கம் என்று அழைக்கப்படுகிறது. கட்டுமான பொருட்களாகவும், கைவினைப்பொருட்களாவும், காகித கூழ் தயாரிக்க பயன்படுத்தபடும், மருத்துவ குணமுள்ள பொருட் களை தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயிகளை தேடி இப்கோ கிசான் ட்ரோன்

இப்கோ நானோ யூரியா (20% தழைச்சத்து), நானோ டி.ஏ.பி. (8% தழைச்சத்து மற்றும் 16% மணிச்சத்து) மற்றும் சாகரிகா திரவ உரங்கள் பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தி மகசூலை அதிகரிக்கும். மேலும் திரவ உரங்களை குருணை உரங்களுக்கு மாற்றாக இலைவழியாக தெளிப்பதன் மூலம் விவசாயிகளின் இடுபொருள் செலவு குறைந்து வருமானம் அதிகரிக்கும். நானோ உரங்களை பிற வேளாண் பூச்சிக் கொல்லிகளுடன் கலந்தும் தெளிக்கலாம்.

**ட்ரோன் தெளிப்பான் மூலம் நானோ உரங்களை பயன்படுத்தும் முறை**

10-12 லிட்டர் டேங்கிற்கு 250-500 மி.லி. நானோ திரவ உரங்களுடன், சாகரிகா, முற்றிலும் நீரில் கரையக்கூடிய உரங்கள், வேளாண் பூச்சி கொல்லி மருந்துகளும் கலந்து பயன்படுத்தலாம். (ஒரு ஏக்கருக்கு 1 டேங்க் போதுமானது). விவசாயிகள் குறைந்த செலவில் ட்ரோன் சேவையை பெற இப்கோ கிசான் உதய் செயலில் முன்பதிவு செய்யலாம்.

- ADVT.



# உயிர் உரம் கொண்டு விதை நெல் நேர்த்தி செய்வது எப்படி?

## விவசாயிகளுக்கு வேளாண் கல்லூரி மாணவிகள் விளக்கம்



திண்டுக்கல், செப்.19

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய பல்கலைக் கழகத்தில் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளநிலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் விஸ்வப்பிரியா, முத்து ஸ்ரீ அபிராமி, விசாலினி, அப்ஸானா சஃப்ரீன் ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தில் தேனி அருகே சின்னமனூர் வட்டாரம் மார்க்கையன் கோட்டையில் விவசாயிகளை சந்தித்தனர்.

அப்போது அவர்கள் விவசாயிகளிடம் கூறியதாவது, விவசாயிகள் நெல் விதைகளை உயிர் உரம் கொண்டு நேர்த்தி செய்தால் 10 முதல் 25 சதவீதம் வரை மகசூல் அதிகரிக்கும். இரசாயன உரத்தின் தேவை 25 % முதல் 30 % வரை குறையும். விதை முளைக்கும் திறனே ஒரு பயிரின் வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்குகிறது. 50 மில்லி திரவ உயிர் உரத்தை தேவையான அளவு ஆறிய அரிசிக்கஞ்சியுடன் ஒரு ஏக்கருக்கான விதையுடன் கலந்து 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும் என்று செயல் விளக்கமளித்தனர். ஒரு ஏக்கருக்கு 100 மில்லி திரவ உயிர் உரத்தை தேவையான அளவு தண்ணீரில் கலந்து வேர் நனையுமாறு 30 நிமிடங்கள் வைத்திருந்து பின்னர் நடவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு 200 மில்லி திரவ உயிர் உரத்தை மக்கிய தொழு உரத்துடன் நன்கு கலந்து நடவுக்கு முன் வயலில் இட்டால் அதிக மகசூல் பெறுவதுடன் இரசாயன உரத்தின் தேவையும் குறைந்து லாபம் அதிகளவில் கிடைக்கும் என்று விளக்கமளித்தனர். இந்த பயிற்சி நிகழ்ச்சியில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விதைகள் விலை தாறுமாறாக உயர்வு

## கட்டுப்படுத்த விவசாயிகள் கோரிக்கை



தூத்துக்குடி, செப்.19

தூத்துக்குடி மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் உள்ளன. பெரும் பாலான நிலங்கள் வானம் பார்த்த பூமி ஆகும். ஆண்டுக்கு ஒரு முறை பெய்யக்கூடிய மழையை நம்பி இந்நிலங்களில் விவசாயம் செய்யப்படுகிறது.

இந்நிலங்களில் உளுந்து, பாசி, கம்பு, மக்காச்சோளம், வெள்ளைச்சோளம், மிளகாய், வெங்காயம், கொத்தமல்லி, சூரியகாந்தி, பருத்தி போன் றவைகள் பயிரிடப்படுகிறது. வரக்கூடிய புரட்டாசி பட்டத்திற்கு விவசாயிகள் தங்கள் நிலங்களில் விதைப்பு செய்ய தயார் படுத்தி வைத்திருக்கின்றனர். இன்னும் புரட்டாசி பருவத்திற்கு சுமார் 20 நாட்களே உள்ளன. விவசாயிகள் தங்கள் நிலங்களில் திரட்சியாக விளைந்த கதிர்களை பதப்படுத்தி எடுத்து வைத்து அதையே விதைகளாக பயன்படுத்தி வந்தனர். அவ் விதைகள் அனைத்தும் நாட்டு ரக விதைகள் ஆகும். இவ்விதைகள் குறைந்த அளவு மகசூல் மட்டுமே கிடைப்பதால் தற்போது உள்ள சூழ்நிலைக்கேற்பவும். தொழில்நுட்ப மாற்றத்திற்கு ஏற்பவும் வீரிய ஒட்டு ரக விதைகளை பயன்படுத்தி அதிகமாக விளைச்சலை தற்போது பெற்று வருகின்றனர். வீரிய ஒட்டு ரக விதைகள் அனைத்தும் தனியார் விதை கடைகளில் விவசாயிகள் விலைக்கு வாங்குகின்றனர். இவ் விதைகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக விலை சராசரியாக இருந்தது. கடந்த ஆண்டு மக்காச்சோளம் விதை மூன்று அரை கிலோ பை சுமார் 1300 வரை விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு அதே மக்காச்சோள பை விதை 1900 ஆக விற்கப்படுகிறது. வெள்ளைச்சோளம் மூன்று கிலோ கொண்ட பை கடந்தாண்டு ரூபாய் எழுநூற்று ஐம்பது இந்தாண்டு ரூபாய் தொள்ளாயிரம், பருத்தி விதை கடந்தாண்டை காட்டிலும் ரூபாய் நானூறு உயர்வு, உளுந்து, பாசி விதை ஐந்து கிலோ பை ரூபாய் நானூறு உயர்வு. அதே போல் சூரிய காந்தி, கம்பு விதைகள் தாறுமாறாக விலை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் கவலடைந்துள்ளனர். மக்காச்சோளம், பருத்தி, உளுந்து, பாசி, கம்பு, வெள்ளச் சோளம் போன்ற விதைகள் அனைத்தும் வெளி மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

தமிழகத்தில் எந்த ஒரு வீரிய ஒட்டுரக விதைகளும் உற்பத்தி செய்யப்படவில்லை. விதைப்பண்ணைகள் அமைக்க அம்மாநில அரசுகள் போதிய கட்டமைப்பு வசதிகளை தனியார் விதை நிறுவனங்களுக்கு ஏற்படுத்தி கொடுப்பதால் விதைகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழகத்தில் சிறுதானிய விதைப்பண்ணைகள் கிடையாது. இதனால் வெளி மாநிலங்கள் விதைகளை நம்பியே விதைப்பு செய்ய வேண்டிய உள்ளது. தமிழக அரசு இந்நிலையை கருத்தில் கொண்டு வருங்காலத்தில் வீரிய ஒட்டுரக விதைகளான மக்காச்சோளம், வெள்ளைச் சோளம், உளுந்து, பாசி, கம்பு, சூரியகாந்தி போன்ற விதைகளை பெருமளவில் விதைப் பண்ணைகள் அமைத்து உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுத்து உதவ வேண்டும்.

கடந்த காலங்களில் 50 கிலோ டி ஏபி உரம் மூட்டை ரூபாய் 1300 க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்தாண்டு விலை உயர்வு இல்லை என்றாலும் உற்பத்தி குறைவு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. டிஏபி அடி உரம் விவசாயிகளுக்கு தாராளமாக கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தூத்துக்குடி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஸ்பிக் உரத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் மாவட்ட நிர்வாகம் செய்து கொடுத்து வருகிறது. இந்நிலையில் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு உற்பத்தி செய்யப் படுகின்ற ஸ்பிக் டிஏபி உரம் சொந்த மாவட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் வெளி மாவட்டங்களுக்கு கொடுப்பதால் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். அதனால் தூத்துக்குடி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஸ்பிக் டி ஏ பி உரம் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளின் தேவைக்கு பின்னரே மற்ற மாவட்ட விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும் தவிர இப்கோ மங்கள் கிரிப் கோ போன்ற பல்வேறு டிஏபி அடி உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் ஸ்பிக் உரத்தையே விரும்புகின்றனர். இதற்கு ஏற்ப தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு ஸ்பிக் உரம் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் தவிர இன்னும் 20 நாட்களே உள்ள நிலையில் பருவமழை துவங்க உள்ளது. கடந்த ஆண்டு விதைகள் விலை ஓரளவு கட்டுப்பாட்டில் இருந்தது இந்த ஆண்டு அனைத்து விதைகளும் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

வேளாண்மை அலுவலகங்களில் மானியத்தில் வழங்கப் படும் விதைகளை விவசாயிகள் விரும்பக்கூடிய விதைகளான அட்வான்ட்டா, டாடா, மைகோ, நிர்மல் போன்ற தனியார் பண்ணைய விதைகளை அரசு கொள்முதல் செய்து விவசாயி களுக்கு மானிய விலையில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கரிசல் பூமி விவசாயிகள் சங்க தலைவர் வரதராஜன் உட்பட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




# பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை

கிருஷ்ணகிரி, செப்.19

கிருஷ்ணகிரி வட்டாரம் KVK - எழுமிச்சங்கிரி கிராமத்தில் வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் உள் மாவட்ட அளவிலான பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் கிருஷ்ணகிரி கே.வி.கே, எழுமிச்சங்கிரி அறிவியல் மையம் S.உதயன், தொழில்நுட்ப வல்லுநர் (Agronomy) பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் பின்பற்ற வேண்டிய சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும், அறுவடை யுத்திகள் நுண்ணூட்ட உரம், உயிர் உரம் இட வேண்டியதின்அவசியத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வேளாண்மைஅறிவியல் நிலையம் எழுமிச்சங்கிரி, T.L. ரமேஷ் பாபு, SMS, Horticulture, ICAR, KVK, கிருஷ்ணகிரி மாடி தோட்டம், மற்றும் வீட்டுதோட்டம் அமைக்கும் முறைகள் அவற்றின் பயன்கள், இயற்கை முறையில் காய்கறி பயிர்கள் ஊட்டச்சத்து அதிகம் உள்ள சிறுதானிய பயிர்கள் அவற்றின் பயன்கள், உயிர் உரங்களின் பயன்பாடுகள், மண் புழு உரம் தாயரிக்கும் முறைகள் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும், காய்கறி பயிர் களில் பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் பூச்சி நோய் தாக்கு தலை கட்டுபடுத்தும் முறைகள், புச்சி விரட்டி, பஞ்சகாவியம், ஜீவாமிருதம் தாயரித்தல் மற்றும் அதன் பயன்களையும், முக்கியதுவத்தையும் பற்றி விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

கே.வி.கே,எழுமிச்சங்கிரி அறிவியல் மையம் கிருஷ்ணகிரி, டாக்டர் ரமேஷ், கால்நடைகள் பராமரிப்பு குறித்தும், ஆடு மாடுகள் வளர்ப்பு, நோய் வராமல் தடுக்கும் முறைகள், தீவனபுல் பராமரிப்பு அதன் நன்மைகளை விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

பார்வதி, வரவேற்புரை மற்றும் அட்மா திட்டம் குறித்தும் திட்ட செயல்பாடுகள் குறித்தும் உயிர் உரங்களின் பயன்பாடுகள், பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். இப்பயிற்சியில் 40-க்கும் மேற்ப்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மக்காச்சோளத்தில் உயர் விளைச்சலை பெறுவதற்கான தொழில் நுட்பங்கள்

மக்காச்சோளம் (சியா மெய்ஸ்) 7,000 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. இது தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான பயிர். இந்தியாவில் மக்காச்சோளம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் முதன்மையானது. நாட்டின் மொத்த மக்காச்சோள உற்பத்தியில் சுமார் 15% ஆகும்.

**சாகுபடிக்கேற்ற காலநிலை மற்றும் மண் வகைகள்**

தமிழ்நாட்டில் டிசம்பர் முதல் மே வரை (22-36) வறண்ட காலநிலை மற்றும் ஜூன் முதல் நவம்பர் (24-28) வரை ஈரமான பருவத்துடன் கூடிய மிதவெப்ப மண்டல காலநிலை உள்ளது. மாநிலத்தில் செம்மண், செம்மண்ணுடன் கூடிய சரள் மண் மற்றும் வண்டல் மண் உள்ளிட்ட பல்வேறு வகையான மண் வகைகளில் பயிரிடப்படுகிறது. பொதுவாக நன்கு வடிகட்டிய மண் மற்றும் போதுமான மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் சாகுபடி செய்யும் போது மகசூல் அதிகரிக்கும்.

**சாகுபடி முறைகள் (பாசன முறையில்)**

ரகங்கள் : COH (M) 6, COH (M) 8, COH (M) 11 (ஆடி முதல் தை பட்டம் வரை).

**நிலத்தினை தயாரித்தல்**

வட்டு (அ) அச்சுப் பலகையைக் கொண்டு வயலை நன்கு உழுது ஒருமுறை உழவு இயந்திரத்தைக் கொண்டு குறுக்கு உழவு செய்து நன்றாக உழவும். எக்டருக்கு 12.5 டன் தொழு உரம் அல்லது 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம் (2. கிலோ/எக்டர்) உரத்துடன் கடைசி உழவுக்கு முன் இடவும். 6 மீ நீளமும் 60 செ.மீ இடைவெளியும் கொண்ட முன் கட்டை அல்லது மேடு கலப்பையைப் பயன்படுத்தி முகடுகளை அமைக்கவும்.

**விதையளவு மற்றும் பயிர் இடைவெளி**

20 கிலோ/ ஹெக்டேர் & 60X20 செ.மீ. ஒரு ஹெக்டேருக்குத் தேவையான விதைகளை 1 கிலோ உயிர் உரங்களான அசோஸ் பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, (அ) அசோபாஸ், அரிசிக் கஞ்சியைப் பயன்படுத்தி, 30 நிமிடம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். விதைகளை 4 செ.மீ ஆழத்தில் உரங்கள் இடப்பட்ட பள்ளத்தில் சேர்த்து மண்ணால் மூடி வைக்கவும். முளைப்பு உறுதி யானால் ஒரு குழிக்கு ஒரு விதை போடவும் இல்லையெனில் ஒரு குழிக்கு இரண்டு விதைகள் போடவும்.

**உர நிர்வாகம்**

யூரியா : பாஸ்பரஸ் : பொட்டாஷ் : 100:30:30 / கிலோ / ஏக்கர். விதைப்பதற்கு முன் : 54.4/30/30 கிலோ என்ற அளவில் அடியுரமாக இட வேண்டும். விதைத்த 25 வது நாளில் மேலும் 2 பங்கு மற்றும் 45வது நாளில் மீதி பங்கு யூரியாவை இட வேண்டும். நுண்ணூட்ட சத்துக்கள் குறைபாடிருந்தால், 50 கி. பெரஸ் சல்பேட் + 12.5 டன்கள் தொழுஉரம் + 40 கி. ஜிங் சல்பேட்) இட வேண்டும்.

**களை நிர்வாகம்**

நட்ட 30வது நாளில் கை களையெடுத்து மண்ணணைக்க வேண்டும். எக்டருக்கு 500 லிட்டர் தண்ணீரில் / 0.5 முதல் 0.75 கிலோ/எக்டருக்கு அட்ரசினைப் பயன்படுத்தவும். நட்ட 25வது நாளில் டெம்போட்ரியோன் 125 கிராம் / எக்டேர் (அல்லது) டோப்ராமெசோன் 125 கிராம் / எக்டேர் பயன்படுத்தவும். ஒரு வேளை களைகளின் தாக்கம் அதிகரிக்குமானால் பெண்டிமெத்தலின் 0.75 கிலோ/எக்டருக்கு பயன்படுத்தவும்.

**ஒருங்கிணைந்த நோய் மற்றும் பூச்சி நிர்வாகம்**

இலை கருகல் மற்றும் தண்டு துளைப்பான், சமீப காலமாக படைப்புழுக்கள் தாக்கம் அதிகமாக உள்ளது. இலைக்கருக்கலை கட்டுப்படுத்த குளோரோதலோனில் (அல்லது) தைபோநேட் மெத்தில் (0.1%) நட்ட 25 முதல் 45 நாட்களுக்குள் 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். பூச்சிகளை கட்டுப்படுத்த ஏர்னாமெக்ட்டின் பென்சோயேட் (அல்லது) குளோரோட்ர நிலிபோரேல் 1 மி.லி / 1 டேங்க் என்றளவில் முதல் அறிகுறி தென்படும் போதே தெளித்துவிட வேண்டும்.

**அறுவடை**

மஞ்சள் நிறத்தில் மாறிய பின்பு, அறுவடைக்கு தயாரான கதிர்களை சேதமின்றி அறுவடை செய்யவும்.

**மகசூல்**

பாசனமுறையில் : 7-8 டன்கள் / ஹெ.

மானாவாரி : 5.5-6 டன்கள் / ஹெ.

மேலும் தகவலுக்கு : **முனைவர் க.கலைச்செல்வி, உதவிப் பேராசிரியர் (உழவியல் துறை), வேளாண் அறிவியல் நிலையம், விருதாச்சலம் - 606 001 மற்றும் முனைவர் பெ.முரளி சங்கர், உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல் துறை), பு.வே.அ.க. புதுக்கோட்டை - 622 303.**

# மண் மாதிரிகளை சேகரித்த வேளாண் மாணவிகள்



மதுரை, செப்.19

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், ப.அம்மாபட்டி ஊராட்சியில் திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைகழகத்தைச் சேர்ந்த இளநிலை வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் சீ.மோனிகா, பி.கீர்த்தனா, கொ.மோ.பிரேமலதா, ஜோ.அமல யோஷ்னி மற்றும் ஆ.இந்துமதி ஆகியோர் ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் கீழ் அவ்வூரில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக அவர்கள் ஆறு விவசாயிகளை சந்தித்து நிலத்தின் தன்மையை அறிய நிலையத்திற்கு (சொக்கிகுளம்) அனுப்பி வைத்தனர்.

அங்கக வேளாண்மை செய்யும் நிலத்திலும் மண் மாதிரிகளைச் சேகரித்து இதற்கும் செயற்கை உரங்கள், பூச்சி மற்றும் களைக் கொல்லிகளை பயன்படுத்தும் நிலத்திற்குமான வேறுபாடுகளையும் அறிந்தனர்.



# தென்னையில் ருகோஸ் சுருள் வெள்ளை ஈக்கள் மற்றும் மேலாண்மை




தென்னை இந்தியா முழுவதும் பயிரிடப் படும் ஒரு முக்கிய எண்ணெய் வித்து மற்றும் தோட்டக்கலை பயிராகும். தென்னையில் எண்ணற்ற பயன்கள் கருதியே காமதேனு என்றும் கற்பக விருட்சம் என்றும் போற்றப் படுகிறது. தென்னையில் 800க்கும் மேற்பட்ட பூச்சிகள் காணப்பட்டாலும் காண்டா மிருக வண்டு, கருத்தலை புழு மற்றும் ஈரியோ பையிட் சிலந்தி ஆகிய பூச்சிகள் மட்டுமே தமிழகமெங்கும் மிகுந்த மகசூலை பாதிக்கிறது. ஆனால், சமீப காலங்களில் தென்னையை ருகோஸ் சுருள் வெள்ளை ஈக்கள் (Aleurodicus rugioperculatus) பாதிக்கப்பட்டது.

### தாக்குதல் அறிகுறிகள்

● இலைகளின் அடிப்பாகத்தில் சுருள் வடிவத்தில் முட்டைகள் காணப்படும். குஞ்சுகளும், முதிர்ந்த ஈக்களும் ஓலைகளின் அடியிலிருந்து சாற்றை உறிஞ்சுகின்றன.

● இவை வெளியேற்றும் நிறமற்ற தேன் போன்ற திரவக் கழிவுகள் கீழ்மட்ட அடுக்கில் உள்ள ஓலைகளின் மேற்பரப்பில் பரவுகின்றன. இவற்றின் மேல் லெப்டோ சைபியம் எனும் கரும்பூசானம் படர்கிறது.




● இப்பூச்சிகளின் பாதிப்பால் மகசூல் இழப்பு பெருமாளவில் ஏற்படுவதில்லை எனினும் இதனால், ஒளிச்சேர்க்கை தடைபட்டு பயிர் வளர்ச்சி பெருமளவில் குன்றி விடுகிறது. இப்பூச்சிகளினால், இலைகளின் சாறு உறிஞ்சப்பட்டு பயிரின் வளர்ச்சி பெருமளவில் பாதிக்க பட்டாலும் பயிர் முழுவதுமாக இறந்து விடுவதில்லை.

● வெள்ளை ஈக்கள் அனைத்து தென்னை இரகங்களிலும் காணப்பட்டாலும், சௌகாட் ஆரஞ்சு குட்டை, மலேசியன் பச்சை குட்டை, மலேசியன் மஞ்சள் குட்டை ஆகிய குட்டை இரகங்களிலும் குட்டை நெட்டை வீரிய ஒட்டு இரகங்களிலும் அதிகளவில் தாக்குதல் ஏற்படுத்துகின்றன.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

## ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

● வெள்ளை ஈக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகள் மஞ்சள்நிற ஒட்டும்6 பாறிகளை கட்டியுள்ள காட்சி பூச்சிகளின் நடமாட்டம் மற்றும் சேதாரத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.



● பூச்சி தாக்குதலின் ஆரம்ப நிலையிலேயே மஞ்சள் ஒட்டுப் பொறிகள் ஏக்கருக்கு 7-10 என்ற அளவில் பயன்படுத்தி பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணித்தும், இவற்றை அதிக அளவில் பயன்படுத்தி பூச்சிகளின் எண்ணிக்கையையும் வெகுவாக குறைக்கலாம்.

● பூச்சிகளின் வளர்ச்சியை தடுக்க, இலை மட்டைகளில் உள்ள ஓலைகளின் அடிப்புறத்தில் நன்கு படுமாறு தண்ணீர் தெளிக்கவும்.

● பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து தென்னை நாற்றுகளை வாங்க வேண்டாம்.

● கிரைசோபெர்லா இரை விழுங்கிகள், இந்த பூச்சிகளில் இளம் பருவம் மற்றும் கூட்டுப்புழு பருவம் நிலைகளை நன்றாக உட்கொள்வதால் தாக்கப்பட்ட தோட்டங்களில் எக்டருக்கு 1000 என்ற எண்ணிக்கையில் விடவும்.

● ஒரு ஹெக்டருக்கு 15 மஞ்சள் ஒட்டும் பொறியை அமைக்கவும்.

● முக்கிய இயற்கை எதிரியான, என்கார்ஸியா குடேலோபே என்னும் ஒட்டுண்ணி இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். இல்லையெனில் இந்த ஒட்டுண்ணிக் குளவிகளின் கூட்டுப்புழு பருவத்தை சேகரித்து புதிதாக தாக்கப்பட்ட தோட்டங்களில் ஓலைகளை சிறிய அளவில் வெட்டி விடவும்.

● கல்வாழை மற்றும் வாழை பயிர்களை, தென்னை மரங்களுக்கு இடையில் பயிரிடுவது மூலம் இந்த இயற்கை எதிரிகளை பாதுகாக்க மற்றும் ஊக்குவிக்க முடியும்.




● வேப்பெண்ணைய் 1 சதம் மருந்தை ஒரு மில்லி ஒட்டு திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் நன்கு படுமாறு தெளிக்கவும்.

● கருப்பூசணத்தை நிவர்த்தி செய்ய மைதாமாவு கரைசல் (ஒரு லிட்டர் நீருக்கு 25 கிராம் பசை) மற்றும் பெவிஸ்டின் 2 சதம் கலந்து தெளிக்கவும்.

● ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் முட்டை மற்றும் இளம் பூச்சிகளை அழிக்கக கூடிய தன்மை வாய்ந்த பூஞ்சானமான ஐசரியா பியுமோரோசியா–வை 1X10 ஸ்போர்ஸ்/மிலி. என்ற அளவில் தெளிக்கவும்.

தகவல் : வெ.லாவண்யா, வி.லோகேஷ், முனைவர் செ.பழனிவேல், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, கண்ணனூர், துறையூர். திருச்சி மாவட்டம் – 621 206.

# விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் நடந்தது



திண்டுக்கல், செப்.19

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டம், அட்மா திட்டத்தின் கீழ் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு மற்றும் வட்டார தொழில்நுட்பக் குழு மற்றும் தோட்டக்கலை அலுவலர் சக்தி வேல் பொறியியல் துறை அலுவலர் விஜயகுமார் வேளாண் துறை துணை வேளாண்மை அலுவலர் முருகன், உதவி விதை அலுவலர் பூபதி மற்றும் அட்மா ஆலோசனை குழு சங்கத் தலைவர் செந்தில் குமார் கலந்து கொண்டு விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் நடத்தப்பட்டது. மற்றும் ஒவ்வொரு துறைகளின் திட்டங்கள் குறித்து பேசப்பட்டது. அது தவிர மாநில அளவிலான சிறுதானிய பட்டறிவு பயணத்தினை அனைத்து விவசாய குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மனதாக விருதை தொழில் பயிற்சி நிலையத்திற்கு 50 விவசாயி களை அழைத்துச் சென்று வர அனைவரும் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் அனைத்து ஆலோசனை குழு உறுப்பினர்களும் ஒப்பமிட்டு இனிதே நிறைவுற்றது. இப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்ம அலுவலர் செந்தில் மற்றும் சரவணன் ஆகியோர் ஆலோசனை குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களை ஒருங்கிணைத்து பெரிதும் உதவினர். அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் விவசாயிகளுக்கு தேனீருடன் நிகழ்ச்சியினை நிறைவு செய்தனர்.

இக்கூட்டத்தில் கலசலிங்கம் தோட்டக்கலை கல்லூரி மாணவர்கள் விஷ்ணு பிரசாந்த், வேல்முருகன், தைனஸ் நோவா, மகமது கபின், லட்சுமிநாராயணன் மற்றும் மனோஜ் ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கிழ் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இக்கூட்டத்தின் நிறைவாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா நன்றி கூறி நிறைவு செய்தார்.